# இலங்கை பெரு நிலப்பகுதி கரையோரத்தின் எல்லைகளின் வெளிச்சுற்றை வரையறுத்தல் தொடர்பான செயற்திட்டத்தின் (டிஈஓசீஓஎம்) - - 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் உருவாகும் சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது கடந்த ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடுக்கு இணங்கப்பட்டுள்ளனவா என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிச் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கணக்கொழிப்பு ஆண்டிற்கான செலவினம் ரூபா 4,336,157 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 771,055,934 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவறாான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் 2012 | 2011 | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கணனி மற்றும் அச்சீட்டு இயந்திரங்கள் | - | - | 6,853,776 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | - | - | 826,913 |
| ஏனைய உபகரணங்கள் | - | - | 1,940,045 |
| உசாத்துணை, கொள்வனவு மற்றும் நிலநடுக்கத் தரவுகள் | - | - | 691,623,036 |
| மீண்டுவரும் செலவினம் | 4,336,157 | 5,430,937 | 69,252,603 |
| தேசிய சமுத்திர அலுவல்கள் குழு | - | - | 559,561 |
| **மொத்தம்** | 4,336,157 | 5,430,937 | 771,055,934 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 உழைக்கும் போதே செலுத்தும் வரி

உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் உழைக்கும் போதே செலுத்தும் வரி வழிகாட்டலின் படி, இரண்டாம் நிலை ஊழிய மொத்த ஊதியம் ரூபா 25,000 இனை மிகைக்குமாயின் உழைக்கும் போதே செலுத்தும் வரி 16 சதவீதமாகும். செயற்திட்டத்தின் இரண்டு ஊழியர்களின் சம்பளத்தில் உழைக்கும் போதே செலுத்தும் வரிக்காக 10 சதவீதம் கழிக்கப்பட்டிருந்தது.

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) 2012 இல் கொள்வனவு செய்யப்பட்டு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட ரூபா 559,560 பெறுமதியான சொத்துக்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் தொடர்புபட்ட ஆதார ஆவணங்கள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியாதிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்திட்டத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையிடமும், தேசிய சமுத்திர அலுவல்கள் குழுவிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. என்ஏஆர்ஏ இடமிருந்தும் என்ஓஏசீ இடமிருந்தும் பெறுவனவுக் கட்டளைகள் கிடைக்கப்பெற்றிராமையால் இச் சொத்துக்கள் குறித்த நிறுவகங்களிடம் ஒப்படைக்கப்பட்டமையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3.3 குறிக்கோள்களை எய்தியதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள்**

2003 இல் செயற்திட்டம் பெரு நிலப்பரப்பு எல்லை கோரல்களுக்காக ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2009 மே மாதமே தேவையான அறிக்கை நோராட் நிதி உதவியுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் எய்தப்பட்டதை அடுத்தும் ரூபா 14,637,222 தொகையான திரண்ட நிதியைப் பயன்படுத்தி 2012 திசெம்பர் 31 வரை செயற்திட்டம் தொடர்ந்திருந்தது.

## 4. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

**4.1** 2012 திசெம்பர் 31 இல் கணக்கொழிப்பு திகதியில் உள்ளவாறு செயற்திட்டம் ரூபா 771.05 மில்லியன் தொகையான கிரயத்தை ஏற்றிருந்தது. நிதியளிப்பு மற்றும் அதன் பயன்பாடுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| நிதியளிப்பு | வழங்கப்பட்ட நிதி | | 2012 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | | 2012 திசெம்பர் 31 கணக்கொழிப்புத் திகதியில் பயன்படுத்தப்பட்ட நிதியின் திரண்ட நிலைமை |
|---|---|---|---|---|---|
| | ஐ அ டொலர் (மில்) | ரூபா (மில்) | ஐ அ டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| இலங்கை அரசாங்கம் | - | 85.00 | 4.89 | - | 79.43 |
| நோர்வே | 2.0 | 185.50 | - | - | 691.62 |
| நோர்வே கலப்புக் கடன் | 5.2 | 463.76 | - | - | |
| | 7.2 | 734.26 | 4.89 | | 771.05 |

## 4.2 நோராட் மானியம் மற்றும் கடன்களின் பயன்பாடு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நோராட் மானியம் மற்றும் கடன்களின் பொழிப்பும் அதன் பயன்பாடும் கீழே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | வழங்கப்பட்ட மானியம்/ கடன் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கொழிப்புத் திகதியில் திரண்ட பயன்பாடு | |
|---|---|---|---|---|
| | ஐ அ டொலர் மில்) | நோ கி மில் | ஐ அ டொலர் மில் | நோ கி மில் |
| மானியம் ( உசாதுணை சேவைகள்) | 2.0 | 14.20 | 0.94 | 6.70 |
| நோர்வே கலப்புக் கடன் (கொள்வனவுகள் மற்றும் நிலநடுக்கத் தரவுகள்) | 5.2 | 36.92 | 5.20 | 36.92 |
| | 7.2 | 51.12 | 6.14 | 43.62 |

மேற்குறித்த கடன் மற்றும் மானியம் 2008 வரை மாத்திரமே கிடைக்கப்பெற்றது. ஐ.அ.டொலர் 5.2 மில்லியன் கடன் தொகை முற்றாகப் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் மானியத்தில் 47 சதவீதத்திற்குச் சமனான ஐ.அ.டொலர் 0.94 மில்லியன் மாத்திரமே 2012 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது.